

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், மண்டைக்காடு அருள்மிகு ஸ்ரீபகவதியம்மன் திருக்கோவிலில், சாமி தரிசனம் செய்து, ரூ.12 இலட்சம் செலவில் நடைபெற்று வரும் கொடிமரம் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

செ.வெ.எண்: 435/2016 நாள்: 12.07.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**
**மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர்**
**திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள்,**
**மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில்,**
**மண்டைக்காடு அருள்மிகு ஸ்ரீபகவதியம்மன் திருக்கோவிலில் ரூ. 3 கோடி செலவில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு, (11.07.2016 )அன்று ஆய்வு செய்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் அவர்கள் முன்னிலையில், மண்டைக்காடு அருள்மிகு ஸ்ரீபகவதியம்மன் திருக்கோவிலில், சாமி தரிசனம் செய்து, கலசாபிஷேகத்தை முன்னிட்டு, நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

அருள்மிகு ஸ்ரீபகவதியம்மன் திருக்கோவிலில், உபயதாரர் திருப்பணிகளான கோபுர திருப்பணிகளுக்கு ரூ. 40 இலட்சமும், (காம்பவுண்ட்) சுற்றுசுவருக்கு ரூ. 5 இலட்சமும், புதிதாக கொடிமரம் நிறுவுவதற்கு ரூ. 12 இலட்சமும், திருக்கோவிலில் 36 தூண்கள் அமைப்பதற்கு ரூ. 18 இலட்சத்திலும், திருக்கோவில் திருப்பணிகளான (காம்பவுண்ட்) சுற்றுசுவருக்கு ரூ. 3 இலட்சமும், வாகன புனரமைப்பு சீரமைத்தலுக்கு ரூ. 3 இலட்சமும், அலுவலகம் பராமரிப்பதற்கு ரூ.12 இலட்சமும், கியூவ் அமைப்பதற்கு ரூ. 25 இலட்சம் ஆகிய மொத்தம் ரூ. 3 கோடி செலவில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை பார்வையிட்டார்.

பின்னர் பக்தர்களுக்கு தயாரிக்கப்படும் அன்னதானம் உணவினை பார்வையிட்டு, ஆய்வு செய்து, கோவிலில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை விரைவில் முடித்திட, சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

ஆய்வின் போது திருநெல்வேலி மண்டல இணை ஆணையர் திரு. லெட்சுமணன், கன்னியாகுமரி மாவட்ட திருக்கோவில்கள் இணை ஆணையர் திருமதி. பாரதி, உதவி ஆணையர் திரு. அருணாசலம், பராமரிப்பு பொறியாளர்கள் இராஜகுமார், ஐயப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. நாஞ்சில் ஏ. முருகேசன், திருக்கோவில் மேலாளர்கள் திரு. ஆறுமுகதரன், திரு. ஆறுமுக நயினார், கண்காணிப்பாளர் திரு. ஜீவானந்தம், மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.